பொருளியல்

பேரினப் பொருளாதாரக் குறிக்கோள்கள்



e-thaksalawa
The National e-learning Portal for The General Education
Start Your Learning Journey with e-thaksalawa

தேர்ச்சி :- 5.0

தேர்ச்சி மட்டம் :- 5.1

பேரினப் பொருளாதாரக் குறிக்கோள்கள்

பொருளாதார மாறிகளை மொத்த ரீதியாக ஆய்வுக்கு உட்படுத்துதல் பேரினப் பொருளாதாரம் ஆகும்.



சமூகமொன்றின் மூலம் மொத்தப் பொருளாதாரச் செயற்பாட்டினூடாக நிறைவேற்றிக்கொள்வதற்கு எதிர்பார்க்கின்ற பல்வேறு நோக்கங்கள் பேரினப் பொருளாதார நோக்கங்கள் எனப்படுகின்றது. அந்நோக்கங்களாவன.

1. நிறைதொழில் மட்டத்தை அடைதல்
2. நியாயத்துவத்தினை உருவாக்குதல்
3. பொருளாதார உறுதிப்பாட்டினை ஏற்படுத்தல்
4. பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தல்
5. நிலைபேறான அபிவிருத்தியை ஏற்படுத்தல்

தொகுப்பு :- திரு.இ.ஞானேஸ்வரன், ஆசிரியர்-பொருளியல், (யா/அருனோதயா கல்லூரி, அளவெட்டி)

கணினி வடிவமைப்பு :- திரு.யோ.செந்தூரன், ஆசிரியர்-த.தொ.தொ, (யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, மீசாலை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

பேரினப் பொருளாதாரப் பிரச்சனைகள் :-

பேரினப் பொருளாதார மாறிகள் எதிர்பார்த்த மட்டத்தை அடையாத போது/எதிர்பாராத பேரினத் தளம்பல்கள் ஏற்படும் போது உருவாகும் இடர்களைப் பேரினப் பொருளாதாரப் பிரச்சனை என்பர்.

பேரினப் பொருளாதாரப் பிரச்சனைகள் சில வருமாறு

1. வேலையின்மை
2. நியாயத்துவமின்மை
3. பணவிக்கம்
4. பொருளாதாரப் பின்னடைவு
5. சென்மதி நிலுவையின் தொடர்ச்சியான குறைநிலை

வர்த்தக சகடவோட்டம் (The Economic Cycle)

பேரினப் பொருளாதார மாறிகளில் ஏற்படுகின்ற ஏற்ற இறக்கங்கள் வர்த்தக சகடவோட்டமாகும். அதாவது மெய்வெளியீடு, வருமானம், தொழில்வாய்ப்பு மற்றும் பொதுவிலை மட்டம் போன்ற பேரினப் பொருளாதார மாறிகளில் ஏற்படுகின்ற தளம்பல்களை வர்த்தக சகடவோட்டம் குறிக்கம்.

இதில் நான்கு கட்டங்கள் உள்ளன.

01) பின்னடைவு (Recession)

பொருளாதாரமொன்றில் ஒன்று அல்லது இரண்டு காலாண்டுகளில் மொத்தக் கேள்வியில் ஏற்படும் வீழ்ச்சி காரணமாக நாட்டின் மெய் உள்நாட்டுற்பத்தி வீழ்ச்சியடைதல் பொருளாதாரப் பின்னடைவு ஆகும்.

02) மந்தம் (Trough)

பொருளாதாரமொன்றின் செயற்பாடுகள் அனைத்தும் அதிதாழ்ந்த நிலையில் இருத்தல் மந்தம் எனப்படுகின்றது.

03) மீட்சி (Recovery)

பொருளாதாரமொன்றின் செயற்பாடுகள் அதிதாழ்ந்த நிலையில் இருந்து மெதுவாக முன்னேற்றமடைதல்/மெய்வெளியீடு மெதுவாக அதிகரித்தல் மீட்சி எனப்படும்.

04) செழிப்பு/உச்சம் (Peak)

பொருளாதாரமொன்றின் செயற்பாடுகள் உச்ச நிலையில் /மெய்வெளியீடு உச்ச நிலையில் காணப்படுதல் செழிப்பு நிலை எனப்படும்.

தொகுப்பு :- திரு.இ.ஞானேஸ்வரன், ஆசிரியர்-பொருளியல், (யா/அருனோதயா கல்லூரி, அளவெட்டி)

கணினி வடிவமைப்பு :- திரு.யோ.செந்தூரன், ஆசிரியர்-த.தொ.தொ, (யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, மீசாலை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

வர்த்தக சகடவோட்டத்தினைப் பின்வரும் வரைபின் மூலம் விளங்கிக்கொள்ளலாம்.



வர்த்தக சகடவோட்டத்தின் நான்கு கட்டங்களின் பண்புகள்

இல	விடயங்கள்	பின்னடைவு	மந்தம்	மீட்சி	செழிப்பு
01	மெய்வெளியீடு	வீழ்ச்சி	மிகக்குறைவு	அதிகரிக்கும்	மிகஉயர்வு
02	வேலையின்மை	உயர்வு	மிகஉயர்வு	குறைவு	மிகக்குறைவு
03	பொதுவிலை மட்டம்	குறைவு	குறைவு	உயரும்	உயரும்
04	மொத்தக் கேள்வி	குறைவு	குறைவு	உயரும்	உயரும்
05	வர்த்தக நம்பிக்கை	குறைவு	மிகக்குறைவு	அதிகம்	மிகஅதிகம்
06	இலாப வீதம்	குறைவு	மிகக்குறைவு	அதிகம்	மிகஅதிகம்

தொகுப்பு :- திரு.இ.ஞானேஸ்வரன், ஆசிரியர்-பொருளியல், (யா/அருனோதயா கல்லூரி, அளவெட்டி)
கணினி வடிவமைப்பு :- திரு.யோ.செந்தூரன், ஆசிரியர்-த.தொ.தொ, (யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, மீசாலை)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

சாத்திய வள வெளியீடு :-

பொருளாதாமொன்றின் வளங்களை பூரணமாக உச்ச வினைத்திறனுடன் பயன்படுத்தும் போது பணவீக்க அழுத்தத்தை ஏற்படுத்தாத வகையில் பெற்றுக்கொள்ளக்கூடிய உத்தமமானதும் நிலைபேறானதுமான உற்பத்தி மட்டத்தை சாத்திய வள வெளியீடு குறிக்கும்.

சாத்திய வள வெளியீடு பொருளாதாரத்தின்நீண்டகால நடத்தையை வெளிப்படுத்தும்.

உண்மை வெளியீடு :-

பொருளாதாரமொன்று குறித்த காலத்தில் பெற்றுக்கொண்ட வெளயீட்டு அளவை உண்மை வெளியீடு குறிக்கும்.

இது பொருளாதாரமொன்றின் குறுங்கால நடத்தையை விளக்குகின்றது.

வெளியீட்டு இடைவெளி :-

பொருளாதாமொன்றின் உண்மை வெளியீட்டுக்கும் சாத்திய வளவெளியீட்டுக்கும் இடையிலான வித்தியாசம் வெளியீட்டு இடைவெளியாகும்.

வெளியீட்டு இடைவெளி = உண்மை வெளியீடு - சாத்திய வள வெளியீடு

நேர்வெளியீட்டு இடைவெளி = உண்மை வெளியீடு > சாத்திய வள வெளியீடு

எதிர் வெளியீட்டு இடைவெளி = உண்மை வெளியீடு < சாத்திய வள வெளியீடு

வர்த்தக சகடவோட்ட நீளம் :-

வர்த்தக சகடவோட்டத்தின் ஓர் உச்சியில் இருந்து இன்னொரு உச்சிக்குச் செல்வதற்கான காலம் வர்த்தக சகடவோட்டத்தின் நீளம் எனப்படும்.

தொகுப்பு :- திரு.இ.ஞானேஸ்வரன், ஆசிரியர்-பொருளியல், (யா/அருனோதயா கல்லூரி, அளவெட்டி)

கணினி வடிவமைப்பு :- திரு.யோ.செந்தூரன், ஆசிரியர்-த.தொ.தொ, (யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, மீசாலை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

பேரினப் பொருளாதாரக் கொள்கைகள் (Macro Economic Policies)

பேரினப் பொருளாதார இலக்குகளை அடைவதற்காக பின்பற்றப்படும் கொள்கைகள் பேரினப் பொருளாதாரக் கொள்கைகள் ஆகும். அவையாவன



தொகுப்பு :- திரு.இ.ஞானேஸ்வரன், ஆசிரியர்-பொருளியல், (யா/அருனோதயா கல்லூரி, அளவெட்டி)

கணினி வடிவமைப்பு :- திரு.யோ.செந்தூரன், ஆசிரியர்-த.தொ.தொ, (யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, மீசாலை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk